இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, “யோனாவின் மகனான சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன்: உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா” என்றார் (மத் 16:15-18)

# இளையோரே கனவு காணும் துணிவை இழக்காதீர்!

## திருத்தந்தை வேண்டுகோள்

**வத்திக்கான்:** பெரிய கனவினைக் காண்பதற்கும், வாழ்க்கையை நிறைவாக வாழ்வதற்குமான துணிவினை இளையோர் ஒருபோதும் இழந்துவிடக் கூடாது என்றும், பாதுகாப்புக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்டு அதை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என்றும் டுவிட்டர் குறுஞ் செய்தியில் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆகஸ்ட் 12 சனிக்கிழமை ஹேஸ்டாக் இளையோர் தினம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டக் குறுஞ்செய்தியில் இவ்வாறு தனது கருத்துக்களைப் பதிவிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இளையோர் அனைவரும் உடன்பிறந்த உறவின் வெற்றியாளர்களாக மாற வேண்டும் என்றும் அழைப்புவிடுத்துள்ளார்.

அன்பான இளையோரே, பெரிய கனவு காண்பதற்கும், வாழ்க்கையை முழுமையாக வாழ்வதற்குமான துணிவை ஒருபோதும் இழக்காதீர்கள்! பாதுகாப்புக் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டு அதை உலகம் முழுதும் பரப்புங்கள். உடன்பிறந்த உறவின் வெற்றியாளர்களாக மாறுங்கள், கடவுள் மற்றும் நல்ல ஆலோசகர்களால் வழிநடத்தப்படுவதன் வழியாக வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளுங்கள் என்று திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மற்றொரு செய்தியில், பிறரை அன்புகூர்பவர்கள் எவரும் எதுவும் செய்யாமல் வெறுமனே சுற்றி நிற்பதில்லை என்றும், பிறரை அன்புகூர்பவர்கள் பணியாற்றுவதில் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றனர் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.



கடந்த ஆகஸ்ட் 10, வியாழனன்று, வெளியிட்டுள்ள தனது குறுஞ்செய்தி ஒன்றில் இவ்வாறு கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிறரை அன்புகூரும் எவரும் இயேசுவின் பெயரால் ஊழியம் செய்வதன் வழியாக மற்றவர்களை அடைய விரைகிறார்கள் என்றும், நம் செயல்கள் வழியாக பிறரை அன்புகூர்கின்றோம் என்றும், அவ்வன்பே நம்மை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்கின்றது என்றும் உரைத்துள்ளார்.

நம் சகோதரர் சகோதரிகளுக்குப் பணியாற்ற நம்மையே நாம் தாழ்த்திக்கொள்ளும்போதுதான் நாம் உயர்வடைகின்றோம் என்றும், நமது வாழ்க்கையை உயர்த்துவது அன்புதான் என்றும் குறிப்பிட்டார்.

அதே வேளை, நாம் பிறருக்கு மனத் தாழ்மையுடன் பணிபுரிவது அவ்வளவு எளிதல்ல என்றும், எலிசபெத்திற்கு உதவிபுரிய நீண்ட தூரம் பயணித்த மரியாவைப் போலவே, நாமும் மற்றவர்களுக்குப் பணியாற்றுவதில் சோர்வு, பொறுமை, கவலைகள் ஆகியவற்றைக் காண்கின்றோம் என்றும் விளக்கிய திருத்தந்தை, இது ஒரு சோர்வு நிறைந்த பயணமாக இருந்தாலும், அதுவே விண்ணகத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் வழியாக அமைகிறது என்றும் தெரிவித்தார்.

நம் சகோதரர் சகோதரிகளுக்குப் பணியாற்ற நம்மையே நாம் தாழ்த்திக் கொள்ளும்போதுதான் நாம் உயர்வடைகின்றோம் என்றும், நமது வாழ்க்கையை உயர்த்துவது அன்புதான் என்றும் குறிப்பிட்டார்.

### இறைபுகழ்ச்சி

நமது பணிகளில் இறைப்புகழ்ச்சி இல்லையெனில் அப்பணி மலடாகிவிடும் என்று எச்சரித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தனது நீண்ட பயணத்திற்குப் பிறகு மரியா சோர்வைப் பற்றி சிந்திக்காமல் இறைவனுக்கு இதயத்திலிருந்து மகிழ்ச்சிப் பாடல் இசைத்தார், ஏனென்றால் இறைவனை அன்புகூர்பவர்கள், இறைப் புகழ்ச்சியைக் குறித்தும் அறிவார்கள் என்றும் கூறினார்.

### நமக்கான கேள்விகள்

என் வாழ்வில் சேவை ஊற்றெடுக்கிறதா? நான், மரியாவைப் போல கடவுளில் அகமகிழ்கிறேனா?... மேலும், எனது இறைபுகழ்ச்சிக்குப் பிறகு, நான் சந்திக்கும் மக்களிடையே அவருடைய மகிழ்ச்சியைப் பரப்புகிறேனா? என்று தங்களுக்குத் தாங்களே கேள்வு எழுப்பிச் சிந்திக்குமாறு திருப்பயணிகளிடம் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

## மலாக்கா, புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில் சிறப்பு மறைகல்விப் பயிற்சி

**மலாக்கா:** கடந்த 22 ஜூலை 2023 சனிக்கிழமை அன்று மலாக்காவில் உள்ள புனித சவேரியார் ஆலய பங்கில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு சிறப்பு மறைக்கல்வி பயிற்சி நடத்தப்பட்டது. அருள் சகோதரி ரீத்தா சவரியண்ணன் அவர்கள் இப்பயிற்சியை திறம்பட வழி நடத்தினார்கள். பங்குத்தந்தை அருள்பணி மோசஸ் இராயப்பன் அவர்களின் அனுமதியோடு ஆலய தமிழ் மறைக்கல்வி பணிக்குழு பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள். மலாக்கா மற்றும் அலோர் காஜாவை சேர்ந்த மறைக்கல்வி ஆசிரியர்கள் மிக உற்சாகமாக பங்கேற்றனர். இப்பயிற்சியில் மறைக்கல்வியின் நோக்கமும் மறைக்கல்வி ஆசிரியர்களின் முக்கிய பங்கை பற்றியும் பேசப்பட்டன.

மறைக்கல்வி ஆசிரியர்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு கிறிஸ்துவின் விழுமியங்களை உள்வாங்கி இறைபணியில் பயணிக்கவும் மறைபோதகம் ஒரு தொழில் அல்ல மாறாக அது ஒரு அழைப்பு என்று பல வாழ்வியல் உண்மைகளை தெளிவாக விளக்கம் அளித்தார். தொடர்ந்து லூக்கா நற்செய்தியின் 24: 13-35 இல் உள்ள இறை வார்த்தை பகுதி வாசிக்கப்பட்டு தியான சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எம்மாவு சீடர்கள் வழி பயணத்தின் இறுதியில் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கண்டு கொண்டனர். இந்த பகுதியில் காணப்படும் பல ஆன்மீக கருத்துகளை கற்றுக் கொண்டோம். மறைக்கல்வி ஆசிரியர் என்னும் அழைப்புக்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்து மாணவர்களுக்கு வழி காட்டும் வகையில் நம்பிக்கையோடு போதித்து முன்மாதிரியான வாழ்வை சான்று பகரும் சிறந்த மறைக்கல்வி ஆசிரியர்களாக திகழ்வதற்குரிய வழிகளை பயிற்சியில் கற்றுக் கொண்டோம்.





மேலும் ஒவ்வொரு மறைக்கல்வி ஆசிரியருக்கு இருக்க வேண்டிய விழுமியங்களும் மற்றும் கிறிஸ்துவின் மீது அன்பும் தனியாத தாகமும் கொண்டு செயல்பட வேண்டும் என்று கற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த ஒரு நாள் பயிற்சி காலையில் புகழ் ஆராதனையோடு தொடங்கியது. பிற்பகல் 3 மணி அளவில் நன்றி இறை வேண்டலோடு இப்பயிற்சி நிறைவுக்கு வந்தது. இந்த வாய்ப்பைத் தந்த இறைவனுக்கும் பல்வேறு நிலைகளில் ஏற்பாடுகளை செய்து உதவியவர்களுக்கும், பங்குத்தந்தைக்கும் அருள் சகோதரிக்கும் நன்றி நவிலப்பட்டது.

*மார்கரெட் சந்தியாகு, புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கு, மலாக்கா.*

# புனித யூதா ததேயு பங்கின் மரியாவின் சேனை உறுப்பினர்கள் பிற பங்குகளுக்குத் திருப்பயணம் மேற்கொண்டனர்

**ரவாங்:** இங்குள்ள புனித யூதா ததேயு பங்கின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மரியாவின் சேனை பணிக்கழுவினர் வடக்கே உள்ள ஐந்து பங்குகளுக்குத் திருப்பயணம் மேற்கொண்டனர். கடந்த ஆகஸ்டு மாதம் 9-ஆம் திகதி 44 மரியாவின் சேனை பணிக்குழு அங்கத்தினரோடு பங்கு மக்கள் சிலரும் இத்திருப்பயணத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல மாதங்களாக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் இறுதியில் அன்னை மரியின் பரிந்துரையில் இப்பயணம் வெற்றியாக முடிந்தது எனவும் ஒருங்கிணைப்பாளர் சகோ. கெரல் மரியதாஸ் அவர்கள் கூறினார்.

பங்குத்தந்தை வின்செண்ட் தோமஸ் அவர்களின் ஆசீரோடு புறப்பட்ட இக்குழுவினர் முதல் பங்காக தாப்பாவில் ததேயு ஆலயத்திற்குச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்த இருந்த செல்வி ரொஸ்லின் அவர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியதாக இருந்தது. மேலும், இங்கு பங்கு மக்களின் அன்பு உபசரிப்பு மிகவும் சிறப்பாக இருந்ததாகவும் குழு உறுப்பினர் கருத்துரைத்தனர்.

குழுவினர் அங்கிருந்து, ஈப்போ, சிலிபின் சாலையில் உள்ள புனித லூர்து அன்னை பங்கிற்கு வருகைத் தந்தனர். அருட்சகோதரர் ஜோர்ஜ் அவர்கள் அவர்களை வரவேற்றார். அங்கும் இறைவேண்டல் மற்றும் தோழமை நிகழ்வுகளோடு, மகிழ்ச்சியாக அருகிலுள்ள இடைவிடா சகாய அன்னை பங்கிற்குச் சென்றார்கள். அங்கு பங்குத்தந்தை பெட்ரிக் மாசாங் அவர்களால் வரவேற்கப் பட்டார்கள். நிறைவாக, இல்லம் திரும்பும் முன், ஈப்போவில் பலவித உணவு



*கம்பார், இருதய ஆண்டவர் பங்கில் அருள்தந்தை சைமன் ஆனந்த் அவர்களுடன்*

உள்ள புனித மரியா ஆலயம் சென்றார்கள். அங்கு பாடலுடான இறைவேண்டலுக் குப் பின், அடுத்தப் பங்ககான கம்பாரில் உள்ள திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்குச் சென்றார்கள். அங்கு பங்குத்தந்தை சைமன் ஆனந்த் அவர்கள் வரவேற்று, சிறப்பு திருப்பலி கொண்டாடி மகிழ்வித்தார்.

தொடர்ந்து, கோப்பேங்கில் உள்ள புனித யூதா ததேயு ஆலயத்தைச் சென்றடைந் தனர். இது ரவாங் தவிர்த்து மற்றோரு யூதா வகைகளைச் சுவைத்தும் பொருள்கள் வாங்கியும் மகிழ்ந்தனர்.

**‘கடவுள் மீதான நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றத்தைக் கொடுக்காது’**

# Instrumentum Laboris கூட்டொருங்கியக்கப் பயணத்தின் (Synodal) முதல் ஆவணம்

எதிர்வரும் அக்டோபர் 4 முதல் 29 வரை நடைபெறவுள்ள 16வது ஆயர்கள் சிறப்பு மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ள `Instrumentum Laboris' எனும் ஆவண மானது நம் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் உள்ளது.

கடந்த அக்டோபர் 17, 2021 ஞாயிறு அன்று நம் தாய்த் திருஅவை வரலாற்றில் 'மாமன்றம் 2021-2023: கூட்டொருங் கியக்கத் திருஅவை – ஒன்றிப்பு-பங்கேற்பு-மறைத்தூதுப்பணி' என்னும் மாமன் றத்தை உரோமையில் திருத்தந்தை பிரான்சிஸ் தொடக்கி வைத்தார்.

பின்னர், கடந்த ஓராண்டு காலமாக பங்குகள், மறைமாவட்டங்கள், வட்டார திருஅவை, மற்றும் கண்டங்கள் ஆகிய நிலைகளில் மக்களின் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு முதல் தொகுப்பு Instrumentum Laboris' இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த முதல் வெளியீடு அடுத்து அக்டோபர் 4 முதல் 29 வரை நடைபெறவுள்ள 16வது ஆயர்கள் மாநாட்டில் மேலும் விவாதிக்கப்படும்.

Instrumentum Laboris' அகில உலக திருஅவையின் முதல் சுற்று ஆய்வு அறிக்கையாகும். இதில் திருஅவையின் கூட்டு ஒருங்கியக்கத்தின் அனுபவமாக வெளியிடப்பட்டுள்ள ஆய்வுகள், கண்டு பிடிப்புகள் அக்டோபர் மாத சந்திப்பில் மேலும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

**யார் இந்த ஆவணத்தை எழுதியது?**

மற்ற ஆவணங்களைப்போல் இது ஒருவர் அல்லது இருவரால் எழுதப்பட்ட ஆவணம் அல்ல. மாறாக, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான மக்களை ஈடுபடுத்தி தயாரிக்கப்பட்ட ஆவணமாகும். எனவே, அனைத்துலகின் கருத்துக்களும் தலத் திருஅவைகளின் குறைபாடுகளும் இதில் எதிரொலிக் கின்றன.

சினோடலிட்டி அல்லது கூட்டு ஒருங்கியக் கப் பயணத்தின் கருப்பொருளான ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் தூதுரைப்பணி ஆகியவற்றின் வழி கடவுள் அனை வரிடமும் எப்படிப் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள, நம் ஒவ்வொருவரின் துணைக்கொண்டு நமது பொதுவான பணிக்காக தூய ஆவியின் செயலை இந்த கூட்டு ஒருங்கியக்கப்பயணத்தின் ஆவணம் (சினோடலிட்டி) நமக்கு நினைவூட்டு கிறது.

வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஆய்வுக் கருத்தரங்கில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சேர்ந்த இறையிய லாளர் அருள்தந்தை டாக்டர் கிளரென்ஸ் தேவதாஸ் மற்றும் சண்டக்கான் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அன்னா தெரேசா பீட்டர் அமண்டுஸ் ஆகிய இருவரும் மலேசியாவின் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளவுள் ளனர்.

நிறைவாக, சினோடல் அல்லது கூட்டு ஒருங்கியக்கப் பயண திருஅவையில் இந்த முதலாவது தயாரிப்பு ஆவணமான Instrumentum Laboris' அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள 16-வது உலக ஆயர்கள் பேரவைக்கு உலக அளவில் இறைமக் களின் தேவைகளை, பிரச்சனைகளை ஆய்வு செய்து திருஅவை முன்னோக்கிச் செல்ல பேருதவியாக இருக்கும் என நம்பப்படுகிது.

**<u>கன்னித் தாயின் தாய்மை</u>**

**‘உருவிலான் உருவாகி உலகில் ஓர் மகன் உதிப்ப, கருவிலான் கருத்தாங்கி கன்னித்தாய் ஆயினயே’**

வீரமாமுனிவர்




# ஒரே திருஅவை-கத்தோலிக்கத் திருஅவையை நம்புகிறேன்!

இன்று ஆண்டின் பொதுக்காலம் 21ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நாம் திருஅவை என்பது உறுதியான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டதொன்று என்று அறிகிறோம். உறுதியான அடித்தளத்தின் மேல் கட்டப்பட்ட திருஅவை விண்ணக வாழ்வின் முன்சுவை. அதை அழிக்க நினைப்போர், பாறையின் மேல் மோதியவர்களைப் போல் ஆவார்கள்.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களிடம் ஓர் ஆய்வினை மேற்கொள்கிறார். மானிட மகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள் என்று இயேசு தம் சீடர்களிடம் கேட்கிறார். பார்வையற்றவர்கள் யானையைப் பார்த்து பல பதில்களைச் சொன்னது போலவே சீடர்களின் பதில் அமைந்திருந்தது. இவர் களின் பதில்களைக் கேட்டறிந்த இயேசு அவர்களிடம், “நீங்கள் நான் யாரெனச் சொல்கிறீர்கள்?” என்று கேட்கின்றார். ஆனால் சீமோன் மட்டும் இயேசுவை ‘மெசியா’ என்றும் ‘வாழும் கடவுளின் மகன்’ என்றும் அறிக்கையிட்டார். பேதுருவின் பதிலைக் கேட்டவுடன், இயேசுவுக்கு மகிழ்ச்சி வந்திருக்க வேண்டும். தன்னைப்பற்றி சொன்னதற்காக அல்ல, தனக்கு பிறகு திருஅவைக்கு யார் தலைவர்? என்பதை, கடவுள் வெளிப் படுத்திவிட்டார் என்பதற்காக. உடனே இயேசு பேதுருவைப் பார்த்து, அதனை வெளிப்படுத்தியது இறைத்தந்தையே, என்று சான்றுபகர்கிறார். ஆக, கடவுளின் பணியா ளர்கள் அனைவருமே, இறைவனின் தேர்வு என்பதை, இது தெளிவுபடுத்துகிறது. ஒருவருடைய திறமையினால் அல்ல, கடவுளின் அருளால் தான், அழைத்தலைப் பெறமுடியும், என்பதும் இங்கே நமக்கு தெளிவாகிறது.

ஒரு நிறுவனம் சிலரைப் பணிக்கு அமர்த்தும் முன் அவர்களை நேர்முகப் பேட்டிக்கு அழைக்கும். அவர்களின் கல்வி சான்றிதழ்களை ஆய்வு செய்யம். பின்னர் அவர்கைளப் பற்றிய சிலரின் நற்சான்றுகளைப் பெற முயற்சிக்கும். இறுதியாக மிகச் சிறந்தவர்கள் மட்டுமே தேர்வுச் செய்யப்படுவர். ஆனால், அப்படியாக தன் 12 சீடர்களையும் தலைமை சீடரையும் தேர்வு செய்யவில்லை. அவர்களின் பலவீனங்கள் அறிந்திருந்தும் அவர்களைத் தேர்வுச் செய்தார். சீமோனின் பெயரை ‘பாறை’ என மாற்றுகிறார். இறைவனே இஸ்ரயேல் மக்களுக்கு பாறையாக இருந்தார் அல்லவா?

இயேசு, பேதுருவின் மேல் திருஅவையைக் கட்டுவேன் என்று சொன்னபோது, திருஅவை பேதுருவைச் சார்ந்திருக்கிறது என்று பொருள்படுவதில்லை. ஏனெனில், திருஅவை பாறை என்கிற ஆண்டவரில் அடித்தளம் பெற்றிருக்கிறது. பேதுருவில், திருஅவை தொடங்கியதாக நாம் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். பேதுருவுக்கு அது கடவுளால் கொடுக்கப்பட்ட கொடை. அதை யாரும் எடுத்துக்கொள்ளவும் முடியாது. அதை நாம் கேள்விக்குட் படுத்தவும் முடியாது. அந்த தலைமைத் துவமே இன்றும் தொடர்கிறது.

இயேசுவை பிறருக்காக, மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும் ஒரு துன்புறும் மெசியாவாகப் பார்க்கின்றபோது பேதுருவும் துன்புற்றார். அவ்வறே, நாமும் பிறருக்காக நம்முடைய வாழ்வை அர்ப்பணிக்க முயல்வோம்.

திருஅவையில் சீமோன் என்ற சிறு கல் பேதுரு என்ற பாறையாக மாற்றம் பெற்றது போல, சிறு சிறு கற்களாக இருக்கும் நாமும் நமது வாழ்வால், வார்த்தையால் நம்பிக்கையை அறிக்கையிட்டு, பிறருக்காக நம்மையே அர்ப்பணிப்போம். ஆழமான இறை நம்பிக்கை வழியாக இறையருள் பெறுவோம். தூய கத்தோலிக்கத் திருஅவையை நம்புகிறேன் என்று துணிவு டன் அறிக்கையிடுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**ஆண்டின் பொதுக்காலம் 21ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | *எசா 22: 19-23* |
| திபா | *138: 1-2a. 2bc-3. 6,8bc 2-* |
| ம் வாசகம் | *உரோ 11: 33-36* |
| நற்செய்தி | *16: 13-20* |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 4**